# விஷ்ணுபுரம் சரவணனுக்கு பால புரஸ்கார், லட்சுமிஹருக்கு யுவ புரஸ்கார் விருது

## சாகித்திய அகாதெமி அறிவிப்பு




விஷ்ணுபுரம் சரவணன்



லட்சுமிஹர்

நமது சிறப்பு நிருபர்

**புது தில்லி, ஜூன் 18:** தமிழ் எழுத்தாளர்கள் விஷ்ணுபுரம் சரவணனுக்கு பால புரஸ்கார், லட்சுமிஹருக்கு யுவ புரஸ்கார் விருதை சாகித்திய அகாதெமி புதன்கிழமை அறிவித்தது.

மத்திய கலாசாரத் துறையின் கீழ் செயல்படும் சாகித்திய அகாதெமி, சிறந்த இலக்கியப் படைப்பாளிகளுக்கு ஆண்டுதோறும் சாகித்திய விருதுகளை வழங்கி கௌரவித்து வருகிறது. இந்த ஆண்டு 24 மொழிகளில் வெளியாகும் குழந்தைகளுக்கான சிறந்த இலக்கியப் படைப்புகளுக்கு பால சாகித்திய புரஸ்கார் விருதும், 35 வயதுக்குள்பட்ட இளம் எழுத்தாளர்களுக்கு யுவ புரஸ்கார் விருதும் வழங்கப்படுகிறது.

இதையொட்டி, 2025-ஆம் ஆண்டுக்கான சாகித்திய யுவ மற்றும் பால புரஸ்கார் விருதுகளுக்கு தகுதிபெறுவோரைத் தேர்வு செய்வதற்கான நிர்வாகக் குழுக் கூட்டம், அகாதெமியின் தலைவர் மாதவ் கௌசிக் தலைமையில் புதன்கிழமை நடைபெற்றது. இதில், யுவ புரஸ்காருக்கு 23 எழுத்தாளர்களையும், பால புரஸ்காருக்கு 24 எழுத்தாளர்களையும் தேர்ந்தெடுக்க கூட்டத்தில் ஒப்புதல் தெரிவிக்கப்பட்டது.

அகாதெமியின் விதிகள் மற்றும் நடைமுறைகளின்படி, ஒவ்வொரு மொழிக்கும் அமைக்கப்பட்ட மூன்று உறுப்பினர்களைக் கொண்ட நடுவர் குழு பரிந்துரைகளின் அடிப்படையில் தகுதிவாய்ந்தவர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

தமிழ் மொழிக்கான பால புரஸ்கார் விருது, 'ஒற்றைச் சிறகு ஓவியா' என்ற நாவலுக்காக எழுத்தாளர் விஷ்ணுபுரம் சரவணனுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. புரஸ்கார் விருது 'கூத்தொன்று கூடிற்று' என்ற சிறுகதை தொகுப்புக்காக மதுரையைச் சேர்ந்த எழுத்தாளர் லட்சுமிஹர்-க்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விருது ஒரு செப்புத் தகடு மற்றும் ரூ.50,000 ரொக்கப் பரிசை உள்ளடக்கியது. வெற்றியாளர்களுக்கு தில்லியில் நடைபெறும் சிறப்பு நிகழ்வில் விருதுகள் வழங்கப்படும் என்று சாகித்திய அகாதெமி குழு தெரிவித்தது.

விஷ்ணுபுரம் சரவணன் திருவாரூர் மாவட்டத்தை சேர்ந்தவர்.

மதுரை மாவட்டம், உசிலம்பட்டியில் பிறந்தவர் லட்சுமிஹர். பொறியியல் பட்டதாரியான இவர், திரைப்பட உருவாக்கம் சார்ந்த பணிகளில் ஈடுபட்டு வருகிறார். மேலும் இவர், ஸெல்மா சாண்டாவின் அலமாரிப் பூச்சிகள் & பிற கதைகள், கிளாஸிக் டச், 'டார்லிங்' என பெயர்சூட்டப்பட்ட சித்தாந்தம் ஆகிய நூல்களையும் எழுதியுள்ளார்.

**முதல்வர் ஸ்டாலின் வாழ்த்து:** பால, யுவ புரஸ்கார் விருதுக்கு தேர்வாகியுள்ள எழுத்தாளர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, எக்ஸ் தளத்தில் அவர் புதன்கிழமை வெளியிட்ட வாழ்த்துச் செய்தி: சுற்றுச்சூழல் பாதுகாப்பை குழந்தைகளுக்கு வலியுறுத்தும் 'ஒற்றைச் சிறகு ஓவியா' நூலுக்காக சாகித்திய அகாதெமியின் பால புரஸ்கார் விருதுக்கு எழுத்தாளர் விஷ்ணுபுரம் சரவணன் தேர்வாகியுள்ளார். ஊஞ்சல், தேன்சிட்டு, கனவு ஆசிரியர் என தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறையின் முன்னெடுப்புகளிலும் திறம்படப் பங்காற்றிவரும் சரவணன், பால புரஸ்கார் விருதுக்குத் தேர்வாகி இருப்பது கூடுதல் பெருமையும் மகிழ்ச்சியும் அளிக்கிறது.

'கூத்தொன்று கூடிற்று' மற்றும் பிற கதைகள் எனும் தலைப்பிலான சிறுகதைத் தொகுப்புக்காக யுவ புரஸ்கார் விருதுக்கு தேர்வாகியுள்ள எழுத்தாளர் லட்சுமிஹருக்கும் எனது பாராட்டுகள். விருது பெறும் இளம் படைப்பாளிகள் மேலும் தமிழைச் செழுமைப்படுத்தும் ஆக்கங்களை தொடர்ந்து அளிக்க வேண்டும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் கேட்டுக் கொண்டுள்ளார்.